# கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரின் (பொது) செயல்முறைகள்
## முன்னிலை:: திரு.மா.வீராசாமி, B.Sc., M.B.A.,

அ1/ 17198/2020 நாள்: 31.12.2020

பொருள்: பொதுப்பணி - தமிழ்நாடு அமைச்சுப் பணி - கன்னியாகுமரி மாவட்டம் வருவாய் அலகு - 2018-2019 மற்றும் 2019-2020 - ஆம் ஆண்டிற்கு தொகுதி - IV தேர்வில் தேர்வு செய்யப்பட்ட இளநிலை வருவாய் ஆய்வாளர்கள் - பட்டியல் வரப்பெற்றது - பணிநியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

படிக்கப் பட்டவை:
1) செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை கடித எண்: 2514/PSD - I/2020, நாள்: 26.05.2020.
2) கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணைகள் எண்:அ1/17198/2020, நாள்: 21.07.2020.
3) அரசாணை எண் 191, பொது (பணிகள்-அ) துறை, நாள்: 01.02.1962.
4) தொடர்புடைய ஆவணங்கள்.

-----------

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் 2018-2019 மற்றும் 2019-2020 - ஆம் ஆண்டிற்கு நடைபெற்ற தொகுதி -IV இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியிடத்திற்கு நேரடி நியமன இளநிலை வருவாய் ஆய்வாளர்களாக தேர்வு செய்யப்பட்டு படிக்கப்பட்டவை 1 - இல் காணும் கடிதத்தின் வாயிலாக கன்னியாகுமரி மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, படிக்கப்பட்டவை 2 - இல் காணும் செயல்முறை ஆணைகளின்படி பணிநியமனம் வழங்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட இளநிலை வருவாய் ஆய்வாளர்களின் பணியினை அவர்களது பெயர்களுக்கு எதிராக குறிப்பிட்டுள்ள பணியில் சேர்ந்த நாள் முதல் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பெயர் (திருவாளர்கள்) | பணிபுரியும் அலுவலகம் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | திரு.பி.கன்னன் | இளநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், கல்குளம் வட்டம். | 24.07.2020 மு.ப |
| 2. | திருமதி.எம்.மஞ்சுளா தேவி | இளநிலை வருவாய் ஆய்வாளர், காசாளர், "ஆ" பிரிவு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகர்கோவில். | 24.07.2020 பி.ப |
| 3. | திரு.வே.குருசங்கர் | இளநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், கிள்ளியூர் வட்டம். | 24.07.2020 பி.ப |

2) மேலும் படிக்கப்பட்டவை 1 - இல் காணும் சென்னை அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளர் கடிதத்தின் பத்தி 5 - இன் படி 2018-2019 மற்றும் 2019-2020 - ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அமைச்சுப் பணி தொகுதி-**IV** இளநிலை உதவியாளர் பணிக்கான தேர்வு தொடர்பாக தொடர்ந்த வழக்கு சென்னை

மற்றும் மதுரை கிளை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள ரிட் மனுக்கள் மீது பிறப்பிக்கப்படும் இறுதியாணைக்கு உட்பட்டு (**"The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Honourable High Court of Madras/Madurai Bench of the Honourable High Court, Madras relating to the post included in Combined Civil Services Examination - IV for the year 2018-2019 and 2019-2020)"** பணியில் சேர்ந்த நாளான கலம் - 4 - இல் கண்ட நாள் முதல் தனியர்களின் பணியினை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

3) தனியர்களின் பணிப்பதிவேட்டில் பணிவரன்முறை தொடர்பான பதிவுகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/- மா.வீராசாமி,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது),
கன்னியாகுமரி மாவட்டம்.

/ உண்மைநகல்/உத்தரவுபடி /

உதவி மேலாளர் (பொது)

31/12/2020

பெறுநர் :
தொடர்புடைய பணியாளர்கள்.

நகல் :
1. சம்பந்தப்பட்ட அலுவலகம். கிடைத்தது
2. அ1 இருப்புக் கோப்பிற்கு.